தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1974 ஏப்ரல் 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

General Hospital for South Madras

* 722 *Q.*—THIRU K. M. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the construction of a Hospital was included in the lay out for Ashok Nagar-Karunanidhi Nagar Scheme;

(*b*) whether the proposal was dropped; and

(*c*) if so, the resons for dropping the scheme?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ—உ) தென் சென்னைக்கு அரசினர் பொது மருத்துவ மனையொன்றை கோடம்பாக்கம்புதூரில் தோற்றுவிக்க அரசிடம் ஒரு திட்டம் சில ஆண்டுகளாகவே பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றி தகுந்த முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தென் சென்னையில் ஒரு மருத்துவ மனை ஆரம்பிப்பது குறித்து தகுந்த முடிவு எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது இருக்கின்ற ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஏராளமான கூட்டம் இருக்கிறது. அங்கே நோயாளிகளுக்கு வேண்டிய படுக்கை வசதிகள் எவ்வளவுதான் அதிகரித்தாலும் போதவில்லை. எனவே, தென் சென்னையில் ஒரு புதிய மருத்துவ மனையைத் துவக்குவதற்குக் கொஞ்சம் காலதாமதமானாலும், இப்பொழுதிருக்கின்ற ஜெனரல் ஆஸ்பத்திரியை இன்னும் விரிவாக்குவது குறித்து செயற்குறிப்பு இருக்கிறதா? சென்ட்ரல் ஜெயிலை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, அங்கு ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதாக ஏற்கெனவே ஒரு செயற்குறிப்பு இருந்தது. அந்த முறையில் இந்த மருத்துவ மனையை விஸ்தரிக்க ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா?

[1974 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கேள்வியினுடைய நோக்கம், எப்படியும் தென் சென்னையில் ஒரு மருத்துவ மனை வரவேண்டும் என்பது. அரசாங்கத்தினுடைய ஆசையும் தென் சென்னையில்—அடையார் பகுதியிலோ, கோடம்பாக்கம்புதூர் பகுதியிலோ, அசோக்நகர் போன்ற பகுதியிலோ—ஒரு மருத்துவ மனை ஏற்படுத்த வேண்டும் என்பது. அதற்காக நிலம் ஒதுக்குவதற்கெல்லாம்கூட, ஏற்கெனவே அரசு முயற்சி எடுத்துக்கொண்டு நிறைவேறியிருக்கிறது. ஏறத்தாழ 140 லட்ச ரூபாய் இருந்தால்தான் ஒரு தகுந்த பொது மருத்துவ மனையை ஏற்படுத்துவதற்குரிய அடிப்படை வசதிகளை உண்டாக்க முடியும். 500 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவ மனையை 15–20 லட்ச ரூபாய் செலவில் ஏற்படுத்துவதென்று, அதற்காக நிதி ஒதுக்கினாலும், இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் எல்லா ஏற்பாடுகளும் செய்து நிறைவேற்ற முடியுமா என்பது சந்தேகமே, வசதிக் குறைவு காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. இந்தக் கேள்வியினுடைய நோக்கம், தென் சென்னையில் பொது மருத்துவ மனையை ஏற்படுத்துவது என்பது. ஜெனரல் ஆஸ்பத்திரியை விரிவுபடுத்துவது என்கிற நோக்கம் இதில் நிறைவேறுது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் இப்படி இரண்டாவது மருத்துவ மனைகள் ஆரம்பிக்க வேண்டும் என்று 1971-ம் ஆண்டில்கூட இந்த மன்றத்தில் சொல்லப்பட்டது. மதுரையில் இரண்டாவது மருத்துவ மனை ஆரம்பிக்க ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா? சென்னையிலும் என்றைக்கு ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சென்னையில் ஆறு, ஏழு பெரிய மருத்துவ மனைகள் இருக்கின்றன. மதுரையில் விரிவு அடைந்த ஒரு பெரிய மருத்துவ மனை இருக்கிறது. இன்னும் ஒரு மருத்துவ மனை—அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும்—துணை மருத்துவ மனை மதுரை தெற்குப் பகுதியில் ஏற்படுத்த வேண்டும் என்று அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு 15 இலட்ச ரூபாய் செலவில் கட்டட அமைப்பு ஏற்படுத்துவதற்கு அரசு யோசித்திருக்கிறது. விரைவில் அதற்கு ஆவன செய்யப்படும். இடத்தை மாநகராட்சி மன்றம் தந்திருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : ஏறத்தாழ முப்பது இலட்சம் ஜனத்தொகை கொண்ட சென்னையில் போதிய மருத்துவ மனைகள் இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதுவும் ஸ்லம் பகுதியில்—குடிசைப்

1974 ஏப்ரல் 3]

பகுதியில்—தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியில் உள்ள நோயாளிகள் மருத்துவ மனைக்குச் செல்ல சங்கடப்படுகிறார்கள். ஆகவே, குடிசைப் பகுதியில் செல்லுவதற்கேற்ற நடமாடும் மருத்துவ மனைகளை அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நடமாடும் மருத்துவ மனையைப்பற்றி சற்று உற்சாகமாகப் பேசப்பட்டது. இப்பொழுது பெட்ரோல் விலை ஏறியிருப்பதால், மருந்தைவிட பெட்ரோல் விலை அதிகமாகும். அப்படிப்பட்ட நிலைமையைவிட ஏழைகள் மருத்துவ மனைக்கு நடந்து வரத் தயாராக இருக்கிறார்கள். துணை மருத்துவ நிலையங்களை அமைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஆனால், அதற்கும் போதுமான வசதி இல்லாத காரணத்தால் தாமதம் ஆகிறது.

Additional building for General Hospital, Madras.

* 723 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to build a multi-storeyed building as an annexe to the Government General Hospital, Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனைக்கு இணைப்பாக முடிவில் ரூ. 56 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், இரட்டை தொகுதியாகவுள்ள கட்டிடம் ஒன்றை கட்டி, அதில் காது, மூக்கு, தொண்டை நோய்த்துறை, புற்று நோய்த்துறை, ரத்த நாள அறுவை சிகிச்சைத்துறை (Vascular Surgery) குண்டிக்காய் இயல்துறை (Nephrology) சிறுநீரக இயல்துறை (Urology) ஆகிய துறைகளை அமைப்பதென்று அரசு முடிவு எடுத்திருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலேயே இவ்வாறு மருத்துவ வசதிகளை அதிகரித்துக்கொண்டு போவதற்குப் பதில், மாவட்ட மருத்துவ மனைகளையும் விஸ்தரித்து, மாவட்ட அளவில் மருத்துவ வசதிகளைப் பரவலாக்குவதற்கு அரசு திட்டமிடுமா?